சென்னை கிழக்கு மாவட்டம் சார்பில் – ‘என் உயிரினும் மேலான....’

# பேச்சுப் போட்டியில் பட்டை தீட்டப்பட்ட பேச்சாளர்களின் தொடர் கருத்தியல் நிகழ்ச்சி!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவிப்பு!



**கழகத்தலைவர், முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, துணை முதலமைச்சர் அவர்களால் நடத்தப்பட்ட என் உயிரினும் மேலான பேச்சுப்போட்டியில் பட்டை தீட்டப்பட்ட பேச்சாளர்களின் தொடர் கருத்தியல் நிகழ்ச்சியின் விவரம் வருமாறு:**

| நாள் / நேரம் | பேசுவோர் | இடம் | தலைமை |
|---|---|---|---|
| **02.11.2024** (சனிக்கிழமை) மாலை 6.00 மணி | சுப.வீரபாண்டியன்<br>தலைவர்.திராவிட இயக்க தமிழர் பேரவை<br>தலைவர். சமூகநீதி கண்காணிப்புக் குழு<br>மோகன்நிதி (தத்துவமே எங்கள் தனித்துவம்)<br>ஜோதி (சமத்துவ பாதையில் சமூக நீதி) | ஒய்.எம்.சி.ஏ, ரித்தர்டன் ரோடு, டவுட்டன். | வி.சுதாகர்<br>எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் |
| **03.11.2024** (ஞாயிறு) காலை 11.00 மணி | முனைவர் பர்வின் சுல்தானா<br>வியானி விஷ்வா<br>(திராவிட மாடலே தேசத்தின் தீர்வு)<br>டெக்ஸன் (எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கும் எப்போதும் வெற்றியை படைக்கும்) | PSP கன்வென்ஷன் சென்டர், அம்பத்தூர் | ஜோசப் சாமுவேல், எம்.எல்.ஏ<br>அம்பத்தூர் வடக்கு பகுதி செயலாளர் |
| **04.11.2024** (திங்கள்) மாலை 6.00 மணி | திண்டுக்கல் லியோனி<br>கழக கொள்கைப் பரப்பு செயலாளர்<br>தலைவர்– தமிழ்நாடு பாடநூல் கழகம்<br>மாறன் (அறமும் அன்பும் எங்கள் கண்கள்)<br>தினேஷ் (பெண்மையை போற்றுவோம்) | ஹெம்ராஜ் பவன் ஓட்டேரி | செ.தமிழ்வேந்தன்<br>திரு.வி.க.நகர் வடக்கு பகுதி செயலாளர் |
| **05.11.2024** (செவ்வாய்) காலை 11.00 மணி | வழக்கறிஞர் அருள்மொழி<br>பிரச்சாரச் செயலாளர் – திராவிடர் கழகம்<br>சிவரஞ்சனி<br>(மகத்தான வளர்ச்சி மருத்துவ புரட்சி)<br>கீர்த்தனா (நோயற்ற தமிழகமே எங்கள் இலக்கு) | இம்பீரியல் எழும்பூர் | மேயர் பிரியா ராஜன்<br>தலைமை செயற்குழு உறுப்பினர் |
| **08.11.2024** (வெள்ளி) மாலை 6.00 மணி | மதிவதனி<br>திராவிடர் கழக துணை பொதுச்செயலாளர்<br>கோகுல் (மக்கள் அதிகாரமே திராவிட ஜனநாயகம்)<br>அரிகிருபா (பெண்ணுக்கு முதலிடம் தருவது எங்கள் திராவிடம்) | திருவள்ளுவர் மண்டபம், பெரியார்நகர், கொளத்தூர் | ஐ.சி.எப்.வ.முரளிதரன்<br>கொளத்தூர் கிழக்கு பகுதி செயலாளர் |
| **09.11.2024** (சனிக்கிழமை) மாலை 6.00 மணி | கம்பம் செல்வேந்திரன்<br>கழக தீர்மானக்குழு செயலாளர்<br>ஸ்ரீலேகா (எல்லாருக்கும் எல்லாம் கிடைக்கும் திராவிடம் அதை படைக்கும்)<br>பார்கவி (உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்) | ஹயாத் மகால் பிராட்வே | எஸ்.ராஜசேகர்<br>துறைமுகம் கிழக்கு பகுதி செயலாளர் |
| **10.11.2024** (ஞாயிறு) மாலை 6.00 மணி | சபாபதி மோகன்<br>கழக கொள்கை பரப்பு செயலாளர்<br>பூபதி (துறைதோறும் வளர்ச்சி தமிழ்நாட்டின் எழுச்சி)<br>சந்தீப் (பக்தர் உரிமை வளர்ப்போம்) | வன்னியர் சத்திரம் அயனாவரம் | வே.வாசு<br>வில்லிவாக்கம் கிழக்கு பகுதி செயலாளர் |
| **13.11.2024** (புதன்) மாலை 6.00 மணி | திருச்சி. என்.சிவா, எம்.பி<br>கழக கொள்கை பரப்பு செயலாளர்<br>தமிழ்வாணன் (நல்லதை மட்டுமே செய்வோம்)<br>மதன் குமார் (முதல்வரால் இது முதன்மை மாநிலம் – புதல்வரால் இது இன்னும் பேர் பெறும்) | இராஜா அண்ணாமலை மன்றம், பாரிமுனை. | எஸ்.முரளி<br>துறைமுகம் மேற்கு பகுதி செயலாளர் |

**மேற்கண்ட கருத்தரங்கத்தில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில நிர்வாகிகள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பகுதி கழக செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், பகுதி நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள், செயல் வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.**

**அமைச்சர் – பி.கே.சேகர்பாபு**
செயலாளர்
சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

---

ஆலந்தூர் மண்டலத்திற்குட்பட்ட ஜீவன் நகரில்

# ரூ.5 கோடியில் கட்டப்பட்ட புதிய பாலம்!

## அமைச்சர் தா.மோ. அன்பரசன் திறந்து வைத்தார்!

சென்னை, அக்.29-

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆலந்தூர் மண்டலம், வார்டு 161க்குட்பட்ட ஜீவன் நகர் 2வது தெருவையும், மேடவாக்கம் பிரதான சாலையையும் இணைக்கும் வகையில் ஆதம்பாக்கம் ஏரிக்கால்வாயின் குறுக்கே ரூ.5 கோடி மதிப்பில் ஜீவன் நகரில் கட்டப்பட்ட புதிய பாலத்தினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் நேற்று (28.10.2024) பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆலந்தூர் மண்டலம், வார்டு 161ல் ஜீவன் நகர் 2வது தெருவையும், மேடவாக்கம் பிரதான சாலையையும் இணைக்கும் வகையில் ஆதம்பாக்கம் ஏரிக்கால்வாயின் குறுக்கே ரூ.5 கோடி மதிப்பில் 76 மீ. நீளம் (அணுகுசாலை உட்பட) மற்றும் 11.50 மீ. அகலத்தில் (பாலத்தின் இருபுறமும் நடைபாதை உட்பட) புதிய பாலம் கட்டப்பட்டுள்ளது.

ஜீவன் நகர் 2-வது தெருவில் இருந்து மேடவாக்கம் பிரதான சாலையை இப்பாலத்தின் வழியாக விரைவில் சென்றடையலாம். இந்தப் பாலம் ஜீவன் நகர், தில்லை கங்கா நகர், ஆதம்பாக்கம், நங்கநல்லூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாகும். இப்பாலத்தின் மூலம் சுமார் 1 இலட்சம் நபர்கள் பயனடைவார்கள்.

இந்நிகழ்ச்சியில், மதிப்பிற்குரிய துணை மேயர் மு.மகேஷ்குமார், தெற்கு வட்டார துணை ஆணையாளர் எம்.பி.அமித், மண்டலக்குழுத் தலைவர் என். சந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி எஸ். ரேணுகா, திருமதி ஜெ. பூங்கொடி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

சென்னை கடற்கரையில் இருந்து வேளச்சேரி செல்லும்

# பறக்கும் ரயில் சேவை இன்று முதல் மீண்டும் தொடக்கம்!

சென்னை,அக்.29

சென்னை கடற்கரையில் இருந்து வேளச்சேரி செல்லும் பறக்கும் ரயில் சேவை இன்று முதல் மீண்டும் தொடங்குகிறது. சென்னையில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் மின்சார ரயில்கள் முக்கிய பங்கு வகித்து வருகிறது. சென்னை கடற்கரை - தாம்பரம் வழித்தடத்தில் 250க்கும் மேற்பட்ட ரயில் சேவைகள் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன. இதனால், லட்சக்கணக்கான பயணிகள் பயனடைகின்றனர். ஆனால், இந்த வழித்தடத்தில் சென்னை கடற்கரை - எழும்பூர் இடையே 3 ரயில் பாதைகள் மட்டுமே உள்ளன. இவற்றில் 2 பாதைகளில் புறநகர் மின்சார ரயில்கள் இயக்கப்படுகின்றன. மற்றொரு பாதையில் விரைவு ரயில்கள் இயக்கப்படுகின்றன. 4வது ரயில் பாதை இல்லாத காரணத்தால், கூடுதல் ரயில்கள் இயக்கவோ அல்லது சரக்கு ரயில்களை குறிப்பிட்ட நேரத்தில் இயக்கவோ முடியாத சூழல் நிலவி வந்தது. ஆகவே சென்னை கடற்கரை - எழும்பூர் இடையே 4வது ரயில் பாதை அமைக்க பயணிகள் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வந்தனர்.

சென்னை கடற்கரை - எழும்பூர் 4வது பாதை அமைக்கும் திட்டத்துக்கு மத்திய பட்ஜெட்டில் ரூ.96.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தை துரிதமாக செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது. ஆகையால், 4வது வழித்தட பணிகளுக்காக சென்னை கடற்கரை - வேளச்சேரி பறக்கும் ரயில் சேவையில் மாற்றம் செய்யப்பட்டது. அதாவது கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் சிந்தாதிரிப்பேட்டையில் நிறுத்தப்பட்டன. தற்போது, சென்னை கடற்கரை - எழும்பூர் 4வது ரயில் பாதை பணி முழுவதுமாக முடிவடைந்துள்ளது. எனவே இன்று முதல் மீண்டும் பறக்கும் ரயில் சேவை தொடங்க உள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. இது புறநகர் ரயில் பயணிகளுக்கு மிகவும் மகிழ்ச்சியை அளித்துள்ளது. சென்னை கடற்கரையில் இருந்து வேளச்சேரிக்கு 45 ரயில்களும், மறுமார்க்கத்தில் 45 ரயில்களும் இயக்கப்பட உள்ளன. சென்னை கடற்கரையில் இருந்து வேளச்சேரி நோக்கி காலை 4.53 மணிக்கு முதல் ரயிலும், வேளச்சேரியில் இருந்து கடற்கரை நோக்கி காலை 4.00 மணிக்கு முதல் ரயிலும் இயக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

---

# வாக்காளர் பட்டியல் திருத்தம் – சிறப்பு முகாம் தேதிகள் மாற்றியமைப்பு!

## தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவிப்பு!

சென்னை,அக்.29-

வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தம் தொடர்பான சிறப்பு முகாம் நடைபெறும் தேதிகளை மாற்றி தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவித்தள்ளார்.

இது தொடர்பான செய்தி வெளியிடு வருமாறு:-

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, 01.01.2025-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு புகைப்படத்துன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் 29.10.2024 முதல் 06.01.2025 வரை மாநிலம் முழுவதும் நடைபெற்று வருகிறது. சிறப்பு சுருக்கமுறைத் திருத்தத்தின், ஒரு பகுதியாக வாக்காளர்கள் தங்கள் பெயரைச் சேர்ப்பதற்கும், வாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்வதற்கும் வசதியாக இந்தியத் தேர்தல் ஆணையத்தால், 09.11.2023, 10.11.2024, 23.11.2024 மற்றும் 24.11.2024 (சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தேதிகளில் வாக்குச்சாவடி அமைவிடங்களில் சிறப்பு முகாம்கள் அறிவிக்கப்பட்டன.

இதற்கிடையில், தமிழக அரசால், 09.11.2024 அன்று பணிநாளாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இந்தியத் தேர்தல் ஆணையம், சிறப்பு முகாம் தேதிகளை 09.11.2024 (சனிக்கிழமை) மற்றும் 10.11.2024 (ஞாயிற்றுக்கிழமை)-க்கு பதிலாக, 16.11.2024 (சனிக்கிழமை) மற்றும் 17.11.2024 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய தேதிகளாக மாற்றியமைத்து அறிவித்துள்ளது.

இவ்வாறு தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவித்துள்ளார்.

---

மகாவீர் நினைவுநாளையொட்டி

# இறைச்சிக் கூடங்களை மூட உத்தரவு!

## சென்னை மாநகராட்சி அறிவிப்பு!

சென்னை,அக்.28

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையின் (கால்நடை மருத்துவப் பிரிவு) கட்டுப்பாட்டில் இயங்கும் 4 இறைச்சிக் கூடங்களும் வருகின்ற 01.11.2024 (வெள்ளிக்கிழமை) அன்று மகாவீர் நிர்வான் தினத்தை முன்னிட்டு அரசு உத்தரவின்படி மூடப்படுகின்றன. இதேபோல், ஜெயின் கோயில்களிலிருந்து 100 மீட்டர் சுற்றளவில் அமைந்துள்ள அனைத்து இறைச்சிக் கடைகளும் மூடப்பட்டு இறைச்சி விற்பனையும் தடை செய்யப்பட்டுள்ளது.

எனவே, இந்த உத்தரவினை செயல்படுத்த வியாபாரிகள் அனைவரும் முழு ஒத்துழைப்பு வழங்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது.

---




சென்னை, எழும்பூர், தாளமுத்து நடராசன் மாளிகையில் உள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் நேற்று (28.10.2024) இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் 2023– 2024 மற்றும் 2024–25 ஆம் ஆண்டு சட்டமன்ற பேரவையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் அறிவித்த அறிவிப்புகளின் செயல்பாடுகள் குறித்தும் தற்போதைய நிலை குறித்தும் துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்அன்சுல் மிஸ்ரா, தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் எஸ்.ருத்ரமூர்த்தி திருநரவிக்குமார். மாவட்ட வருவாய் அலுவலர்கள் திருமதி.மு.இந்துமதி, திருமதி.அங்கையர்கன்னி, கண்காணிப்புப் பொறியாளர்கள் திரு.ராஜ மகேஷ்குமார், திருபாலமுருகன் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.